# 6th Social Science Lesson 1 Questions in Tamil

## 1. வரலாறு என்றால் என்ன?

1. வரலாறு என்ற சொல் ___________மொழிச் சொல்லான 'இஸ்டோரியா' என்பதிலிருந்து பெறப்பட்டது.

   A) இலத்தீன்

   B) பிரெஞ்சு

   C) சீன மொழி

   **D) கிரேக்கம்**

   **(குறிப்பு: இஸ்டோரியா என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் 'விசாரிப்பதன் மூலம் கற்றல்' என்பதாகும்.)**

2. கூற்று 1: வரலாறு என்பது கடந்தகால நிகழ்வுகளின் காலவரிசைப் பதிவு.

   கூற்று 2: வரலாற்றின் காலம் ஆண்டுகளில் கணக்கிடப்படுகிறது.

   **A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

   B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

   C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

   D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**வரலாற்றில் காலம்**

வரலாற்றின் காலம் ஆண்டுகளில் கணக்கிடப்படுகிறது. பொ.ஆ.மு. / பொ.ஆ. என்பது பொது ஆண்டிற்கு முன்/ பொது ஆண்டு




3. கீழ்க்கண்டவற்றுள் புதிய கற்கால கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் எவை?

   1. மெஹர்கர் 2. மாகரா 3. அத்திரம்பாக்கம்

   4. அதிச்சநல்லூர் 5. டவோஜலி ஹேடிங்

   A) 1, 2, 3 B) 2, 3, 4 **C) 1, 2, 5** D) 2, 3, 5

   **(குறிப்பு: <u>புதிய கற்கால கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்</u>**

   **புர்ஜஹோம், மெஹர்கர், கோல்டிவா, மாகரா, சிரண்ட், டவோஜலி ஹேடிங், பிரம்மகிரி, பையம்பள்ளி)**

4. இரும்புக் கால கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் _______.

   A) லோத்தல்

   B) கோல்டிவா

   **C) ஹல்லூர்**

   D) மெஹர்கர்

   **(குறிப்பு: வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் நம்முடைய முன்னோர்கள் பயன்படுத்திய கற்கருவிகளைக் கொண்டு அவர்கள் வாழ்ந்த காலத்தையும், அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும் நாம் அறிந்து கொள்ளலாம்.)**

5. கீழ்க்கண்டவற்றுள் வெண்கலக் கால கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் எவை?

1. லோத்தல் 2. பிம்பேட்கா

3. பையம்பள்ளி 4. ஆதிச்சநல்லூர்

**A) 1, 4** B) 1, 2, 3 C) 3, 4 D) 1, 3, 4

6. கீழ்க்கண்டவற்றுள் பழைய கற்கால கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் எவை?

1. கோல்டிவா 2. பிம்பேட்கா 3. அத்திரம்பாக்கம்

4. ஆதிச்சநல்லூர் 5. ஹன்சாகி பள்ளத்தாக்கு

A) 1, 2, 3 B) 2, 3, 4 C) 1, 3, 5 **D) 2, 3, 5**




7. கற்கருவிகளை பயன்படுத்தியதற்கும் எழுதும் முறைகளை கண்டுபிடித்ததற்கும் இடைப்பட்ட காலம்

A) வரலாற்றுத் தொடக்க காலம்

**B) வரலாற்றுக்கு முந்தைய காலம்**

C) இருண்டகாலம்

D) கற்காலம்

**(குறிப்பு: தொல்லியல் அடையாளங்களான கற்கருவிகள், புதைபடிவங்கள், பாறை ஓவியங்கள் போன்ற பலவற்றிலிருந்தும் வரலாற்றுத் தரவுகளைப் நாம் பெறுகிறோம்.)**

8. கூற்று 1: வரலாற்றுக்கும், வரலாற்றுக்கு முந்திய காலத்திற்கும் இடைப்பட்ட காலம் வரலாற்றுத் தொடக்க காலம் ஆகும்.

கூற்று 2: வரலாற்றுத் தொடக்க காலத்தில் எழுதப்பட்ட பதிவுகள் உள்ளன. தற்போது அவற்றின் பொருளை நாம் புரிந்து கொண்டுள்ளோம்.

A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

**B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: வரலாற்றுத் தொடக்க காலத்தில் எழுதப்பட்ட பதிவுகள் உள்ளன. ஆனால், அவற்றின் பொருளை இன்னும் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.)**

9. கூற்று 1: நாணயம், அதன் வரலாறு தொடர்பான அறிவியல் சார்ந்த துறை நாணவியல் ஆகும்.

கூற்று 2: கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்ட செய்திகளை ஆராய்வதற்கான துறை கல்வெட்டியல் ஆகும்.

**A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

10. கூற்று 1: தம்மா என்பது சமஸ்கிருத மொழிச் சொல்.

கூற்று 2: இது பிராகிருதத்தில் தர்மா எனப்படுகிறது.

A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு**

**(குறிப்பு: தம்மா என்பது பிராகிருத மொழிச் சொல். இது சமஸ்கிருதத்தில் தர்மா எனப்படுகிறது. இதன் பொருள் 'அறநெறி' ஆகும்.)**

11. யாருடைய ஆட்சியில் புத்த மதம் ஆசியாவின் பல்வேறு பகுதிகளுக்கு பரவியது?

A) அக்பர்

B) கனிஷ்கர்

**C) அசோகர்**

D) பாபர்

**(குறிப்பு: பண்டைய இந்திய அரசர்களில் பேரும் புகழும் பெற்ற அரசர் அசோகர் ஆவார்.)**

12. __________ போருக்கு பின் அசோகர் புத்த சமயத்தைத் தழுவி, அமைதியையும் அறத்தையும் பரப்புவதற்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்தார்.

A) இரண்டாம் பானிபட் போர்

B) இலங்கை போர்

C) சௌசா போர்

**D) கலிங்கப் போர்**

**(குறிப்பு: வெற்றிக்குப் பின் போரைத் துறந்த முதல் அரசர் அசோகர்.)**

13. தேசியக் கொடியில் இடம்பெற்றுள்ள 24 ஆரக்கால் சக்கரம் அசோகர் நிறுவிய __________ தூணில் உள்ள முத்திரையிலிருந்து பெறப்பட்டது.

A) அமர்நாத்

**B) சாரநாத்**

C) கேதார்நாத்

D) பத்ரிநாத்

**(குறிப்பு: உலகிலேயே முதன்முதலாக விலங்குகளுக்கும் தனியே மருத்துவமனை அமைத்துத் தந்தவர் அசோகர்)**

14. கீழ்க்கண்டவற்றுள் யாருடைய வரலாற்று ஆய்வுகள் மூலம் அசோகரின் சிறப்புகள் வெளி உலகுக்கு தெரிய வந்தன?

1. வில்லியம் ஜோன்ஸ் 2. ஜேம்ஸ் பிரின்செப்

3. அலெக்சாண்டர் கன்னிங்காம் 4. சார்லஸ் ஆலன்

**A) 1, 2, 3** B) 2, 3 C) 1, 2, 4 D) 1, 3, 4

**(குறிப்பு: அசோகர் குறித்த தகவல்கள், வரலாற்றின் பக்கங்களில் 20ஆம் நூற்றாண்டு வரை இடம்பெறவில்லை.)**

15. "The Search for the India's Lost Emperor" என்ற நூலை வெளியிட்டவர்?

A) ஜேம்ஸ் பிரின்செப்

B) அலெக்சாண்டர் கன்னிங்காம்

**C) சார்லஸ் ஆலன்**

D) வில்லியம் ஜோன்ஸ்

**(குறிப்பு: சார்லஸ் ஆலன் எனும் ஆங்கிலேய எழுத்தாளர் அசோகர் குறித்த அனைத்து வரலாற்று ஆவணங்களையும் சேகரித்து தொகுத்து "The Search for the India's Lost Emperor" நூலாக வெளியிட்டார்.)**

16. அசோகரின் பெருமையை எடுத்துச் சொல்லும் சான்றுகள் எவை?

1. சாரநாத் தூண் 2. அமர்நாத் குகை

3. டெல்லி செங்கோட்டை 4. சாஞ்சி ஸ்தூபி

A) 1, 2 B) 2, 3 **C) 1, 4** D) 2, 4

17. பழங்கால மனிதன் தனது உணவை சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை

A) வணிகம்

**B) வேட்டையாடுதல்**

C) ஓவியம் வரைதல்

D) விலங்குகளை வளர்த்தல்

**(குறிப்பு: பழங்கற்கால மனிதர்கள் எப்படி வேட்டையாடினார்கள் என்பதை மலைப்பாறைகளிலும், குகைச் சுவர்களிலும் வரையப்பட்டுள்ள பாறை ஓவியங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்)**

18. கூற்று: பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும் போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.

காரணம்: குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்தபோது, விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.

A) கூற்று சரி, காரணம் தவறு

**B) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி**

C) கூற்று தவறு, காரணம் சரி

D) கூற்று தவறு, காரணமும் தவறு

19. பழைய கற்கால மனிதன் பெரும்பாலும் வாழ்ந்த இடங்கள் _______.

A) ஆற்றங்கரை

**B) குகை**

C) மரங்கள்

D) படகு

20. பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் அகழாய்வுகள் மூலமாக தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. அப்பொருட்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ளப் பாதுகாக்கப்படுகின்றன. இக்கூற்றுடன் தொடர்புடையது எது?

A) அருங்காட்சியகங்கள்

**B) புதைபொருள் படிமங்கள்**

C) கற்கருவிகள்

D) எலும்புகள்

21. தவறான இணையைக் கண்டுபிடி

A) பழைய கற்காலம் – கற்கருவிகள்

B) பாறை ஓவியங்கள் - குகைச் சுவர்கள்

C) செப்புத் தகடுகள் - ஒரு வரலாற்று ஆதாரம்

**D) பூனைகள் – முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு**

22. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) பாறைகள் மற்றும் குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

B) வேட்டையாடுதலை குறிப்பதாக ஓவியங்கள் இருந்தன.

C) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்.

**D) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.**

**(குறிப்பு: பண்டைய மனிதர்கள், குகைகளில் வாழ்ந்தபோது, பாறைகளில் ஓவியங்கள் வரைந்தனர். இவை பாறை ஓவியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. தமது வாழ்க்கை நிகழ்வுகளைப் பதிவு செய்வதற்காக இவ்வாறு செய்திருக்கலாம்.)**

23. பொருத்துக.

| | |
|---|---|
| 1. பாறை ஓவியங்கள் | i) செப்புத் தகடுகள் |
| 2. எழுதப்பட்ட பதிவுகள் | ii) மிகவும் புகழ்பெற்ற அரசர் |

3. அசோகர் iii) தேவாரம்

4. மத சார்புள்ள இலக்கியம் iv) வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது.

A) ii i iii iv
B) iii i ii iv
**C) iv i ii iii**
D) ii i iii iv

24. கூற்று 1: பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன.

கூற்று 2: பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் தொல்லியல் துறையினரால் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

**A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

25. _______ என்பவர் பதிவு செய்திருக்காவிட்டால், அசோகரின் வரலாறு மறைக்கப்பட்ட வரலாறாக இருந்திருக்கும்.

A) ஜேம்ஸ் பிரின்செப்

B) அலெக்சாண்டர் கன்னிங்காம்

**C) சார்லஸ் ஆலன்**

D) வில்லியம் ஜோன்ஸ்

**(குறிப்பு: கல்வெட்டுகள், நினைவுச் சின்னங்கள், செப்புப்பட்டயங்கள், வெளிநாட்டவர் மற்றும் வெளிநாட்டு பயணக்குறிப்புகள், நாட்டுப்புறக் கதைகள் போன்றவை வரலாற்றைக் கட்டமைக்கவும் மறுசீரமைக்கவும் பெரிதும் உதவுகின்றன.)**

26. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) கோட்டை - வேலூர்

B) கோயில்கள் – தஞ்சாவூர்

C) ஸ்தூபி – சாஞ்சி

**D) மடங்கள் - திருமலை நாயக்கர் மஹால்**

**(குறிப்பு: மடங்கள் - டபாங், அரண்மனைகள் - திருமலை நாயக்கர் மஹால்)**